# முத்தமிழ் விழா


## சிறப்பிதழ்

1975

FIDE ET LABORE

ST PATRICK'S COLLEGE

## புனித சம்பத்திரிசியார் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RANJITH

- Chairs
- Glasses
- Curry Dishes
- Ice Cream Cups
- Cups & Saucers.
- Benches
- Plates
- Rice Plates
- Spoons

etc.

Suitable for any occasion

## RANJITH

No. 16, Martyn Lane, JAFFNA.

எந்த வைபவத்திற்கும் உகந்த

- கதிரைகள்
- வாங்குகள்
- ஐஸ்கிறீம் கிண்ணங்கள்
- பீங்கான்கள்
- கிளாஸ்கள்
- கரண்டிகள்

ஆகியவற்றை வாடகைக்குப் பெற

## றஞ்சித்

இல. 16, மாட்டின் லேன், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க. முகுந்தன்.
வகுப்பு 12.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த
நிலமந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறும் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறன்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே!

பேராசிரியர்: சுந்தரம்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்களிலே.........

1. தமிழ்த்தாய் வாழ்த்து
2. மலரின் இதழ்களிலே
3. முத்தமிழ் விழாச் சிறப்பிதழ்
4. ஆசிச் செய்தி
5. அதிபரின் ஆசிச் செய்தி
6. அமைப்பாளரின் ஆசிச்செய்தி
7. சிறப்பு மலர் பேசுகின்றது
8. தமிழ்த்தாயே நீ நீடு வாழ்க
10. இதழாசிரியரின் கருத்தினிலே
11. தலைவரின் நோக்கினிலே
12. இனிய தமிழ்
13. முத்தமிழ் விழாவில் நிகழ இருப்பவை
15. பெண்களாண்டில் பெண்களுக்கு
16. செயலாளர் நன்றி கூறுகிறார்
17. மூன்றெழுத்து
18. அவர் வருவாரா ?
20. தமிழே ஆர்த்தெழுவாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழாச் சிறப்பிதழ்
# 1975

அமைப்பாளர்கள்

அருட்திரு தி. இ. தேவராஜன் அடிகள்
திரு. ஏ. எஸ். அகஸ்ரீன்

தலைவர்

எ. யோ. செபஸ்ரியன்தாசன்

செயலாளர்

அ. க. அருள்நேசன்

பத்திராதிபர்

செ. பேரின்பராஜா

ஒத்துநோக்குனர்கள்

க. முகுந்தன்
யோ. சூ. ரைற்றஸ்
அ. புறாஞ்சே கிறிஸ்ரி

அச்சகம்

கூட்டுறவு அச்சகம்
மெயின் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

**பிரதம விருந்தினர் கலாநிதி அ. சண்முகதாஸ்**
*விரிவுரையாளர் (தமிழ்த்துறை) யாழ். வளாகம்*

புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இவ்வருடம் தொடக்கம் முத்தமிழ் விழா கொண்டாடத் தொடங்குகின்றனர். இந்த வருடம் அவர்களுக்கு ஒரு சிறப்பான வருடம். புனித பத்திரிசியார் கல்லூரியோடு தொடர்புடைய தவத்திரு நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசருடைய நூற்றாண்டு இது. ஈழமெங்கும் அப் பேரறிஞர் பற்றிய ஆய்வுரைகள், விழாக்கள் நடைபெற்றன. இத்தகைய சிறப்பான ஆண்டு முதல் புனித பத்திரிசியார் மாணவர்கள் முத்தமிழ் விழா வொன்றினைக் கொண்டாடுவதும், அவ்விழாவினை மாணவ சமூகமும் தமிழ் மக்களும் நினைவில் நிறுத்த ஒரு சிறப்பு மலர் வெளியிடுவதும் பொருத்தமே. அவர்கள் முயற்சிகள் வெற்றியுடன் நல்ல முடிவு பெற என் உளங் கனிந்த ஆசிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் ஆசிச் செய்தி



தாய் மொழியில் கல்வி போதிக்கப் படத் தொடங்கிய நாட் தொடக்கம் மாணவர்கள் மத்தியில் தமிழ்மொழிமேல் தோன்றிய ஆர்வம் வளர்ந்துகொண்டே வருவது நம்மெல்லோர்க்கும் மகிழ்ச்சி தருவதாகும். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள் இதற்கு விதிவிலக்கல்ல. தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு எம் கற்ற கல்லூரியைச் சேர்ந்தோர் ஆற்றிய பணிகளை இங்கு குறிப்பிடுதல் அவசியமாகாது.

இதற்குமுன் இயல், இசை, நாடகம் ஆகிய துறைகளில் தனித் தனி நடாத்தப்பட்டு வந்த நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து, இவ்வருடம் முத்தமிழ் விழாவாகக் கொண்டாடுதல் போற்றப்பட வேண்டியதாகும். இவ்விழாவையொட்டி வெளிவரும் இம்மலருக்கு இச்செய்தியை அனுப்புவதில் பூரிப்படைகின்றேன். இவ்விழா நனவாக அயராதுழைத்த குழுவினரைப் பாராட்டுவதுடன், விழாவின் வெற்றிக்கும் ஆசி கூறுகின்றேன். இந்நிகழ்ச்சி கல்லூரியின் வருடாந்த நிகழ்ச்சிகளில் ஒன்ருக நிரந்தர இடம்பெற மாணவர்கள் தம் பூரண ஒத்துழைப்பையும் ஆதரவையும் எதிர்வரும் ஆண்டுகளிலும் நல்குவார்கள் என்றும் நம்புகிறேன்.

அருட்திரு. ரி. ஏ. ஜெ. மதுரநாயகம்
அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைப்பாளரின் ஆசிச் செய்தி

**திரு. ஏ. எஸ். அகஸ்ரீன்**
*( சமூக சேவைக் கழக இயக்குனர் )*

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்' என்று போற்றப்படும் நம் தாய்மொழி அன்று தொட்டு இன்றுவரை மொழி அபிமானம் மிக்க ஒரு சிலரால் வளர்த்து வளம்படுத்தப்பட்டு வருகிறது. இத் தாய் மொழிப் பணியானது தலைசிறந்த சமூகப் பணியாகும்.

சம்பத்திரிசியார் கல்லூரியில், ஞானப்பிரகாசரின் நூற்றாண்டாகிய இவ்வாண்டில் முத்தமிழ் விழா எடுக்க முன்வந்த முயற்சியானது போற்றத்தக்கது. இங்கு இது தமிழ்ப்பணி மாத்திரமன்று, இக்கல்லூரி இளைஞரின் செயல்திறன், ஆக்க முயற்சி உழைப்பு என்பனவற்றின் பிரதிபலிப்பாகவும் உள்ளது. இவ்விழாவின் ஒரு அம்சமாக உள்ள இம்மலரே இதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டாகும்.

விழாக் குழுத்தலைவன் செல்வன் E. J. செபஸ்ரிதாசன் செயலாளர் A. C. அருள்நேசன், பத்திராதிபர் செ. பேரின்பராஜா மற்றும் குழு அங்கத்தவர்களை போற்றி ஊக்குவிக்கும் இவ்வேளை இப்பணி மேன்மேலும் வளரவேண்டும். இதைப் பின்பற்றி நம் இளைஞர் ஆக்க வேலைகளில் ஆர்வம் பெறவேண்டும் என வேண்டி நிற்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்பு மலர் பேசுகின்றது

எனக்கு விழா எடுப்பது கண்டு பெருமகிழ்வடைகின்றேன். எப்போ ஒரு நாள் எடுத்தனராம். இப்போ இன்று எடுப்பதனால் பரவசமடைகின்றேன்.

என் எண்ணத்தை நிறைவேற்ற எத்தனை நாள் காத்திருந்தேன். உண்மையைச் சொல்லிவிட ஊமைக்கு வாய் திறந்தால்போல் என் எண்ணத்தைச் சொல்லுகின்றேன்.

எத்தனை நாள் முன் வாழ்ந்த என் பெற்றோர்தான் தமிழ் என்ற மூன்றெழுத்தால் ஆகிவிட்ட இயல், இசை, நாடகம் என்பதாம் முத்தமிழ் என்றாலே முடிவில்லை அதற்கென கூறுவர் முன்னோர்கள். மூவேந்தர் ஆண்ட நாட்டில் முடிசூடா மன்னராகி நாவேந்தர் என்றோரால் இயலெனப் பெயர் பெற்று, பாவேந்தர் பலபேரால் இசையெனப் பெயர் பெற்று, நாடகத்துடன் இணைந்து ஆகிவிட்டேன் முத்தமிழாய். எனைப்பெற்ற தாய் யாரென்று எனக்கே தெரியாது. உற்றாரை யான் கேட்டேன். விழிக்கின்றார் முழி பிரட்டி அப்போதுதான் புரிந்தது. கல் தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றியோன் யான் என்று, மூன்றெழுத்தால் சொல்லிவிட்டால் வருகிறது என்பேரு. மூன்றெழுத்துக்கும் எனக்கும் முன்பிருந்தே தொடர்புண்டு. அதை மூடி மறைக்க நினைத்திடினும் மூச்சடங்கி அழிய மாட்டேன் ஏன்? எவர் தாவினுலும் நானுள்ளேன். நட்பெனும் மூன்றெழுத்தால் மடக்கிவிட்டேன். பலபேரை அன்பெனும் மூன்றெழுத்தால் அடிபணிந்தோர் பலபேர்கள். அறிவுக்கு அடிமையாகி பண்புடன் எனை நாடி காதல் வசப்பட்டோர். எத்தனை பேர் இத்தனை பெருமைகளும் எனக்குண்டு எனச் சொல்வதில் எனக்கோர் மூன்றெழுத்தால் பெருமை.

என் புகழ் அறிந்து நற்றமிழ் புலவன் ஒருவன் பாடினான். தேனும் தினைமாவும் யாகும் பருப்பும் இவை நான்கும் கலந்து நான் தருவேன் நீ எனக்கு சங்கத் தமிழ் மூன்றும் தா என்று இவ்வாறு தித்திக்கும் தேனுக்கும் தினைமாவுக்கும் ஒப்பிட்டுப் பாடினால் பழம் பெரும் ஔவை மூதாட்டி. இன்னும் நாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம் என்றார் தீர்க்கதரிசனம் படைத்த சுப்பிரமணிய பாரதியார். ஏன்? தமிழுக்கு அமுதென்று பெயர் அந்தத் தமிழ் எந்தன் உயிருக்கு நேர் என கவிமழை பெரழிந்தார் பாவேந்தன் பாரதிதாசன். இதனால் தான் மேடைப் பேச்சொன்றில் அமரர் அண்ணா கூறினார் தமிழன் சிறப்பே ஒரு தனிச் சிறப்பே ஒரு தனிச் சிறப்பென்று இத்தனை சிறப்புக்களை ஒருங்கமையப்பெற்ற எனது சிறப்பு ஏன்! கலை, கலாச்சாரம், பண்பாடு இவை யாவுமே பழமையானவை தனிச்சிறப்புடையவை.

மூவேந்தர் ஆண்ட நாடுதான் தமிழ் நாடு என்றும் அதனை சேர, சோழ, பாண்டிய நாடு என்றும் அழைப்பார்கள். இமயம் முதல் குமரிவரை வாழ்ந்தவர்கள் தமிழர்கள். அவர்களது நாகரீகம் இமயமலைச் சாரலிலேதான் உற்பத்தியானது என்பது தமிழர் வரலாறு. இதனால் வரலாற்றுப் பெருமை மிக்கவன் நான் என்று மார்பு தட்டிச் சொல்லுகின்றேன். நான் என்ற மமதை யல்ல நாம் தமிழர்கள் என்ற பெருமை. எங்கும், எப்போதும், எனக்கு விழா எடுக்கிறார்கள். இங்கும் எடுப்பது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். இதுவரை

என் எண்ணத்தைச் சொன்னேன்.

வளர்க தமிழ்

வணக்கம்

— ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாயே நீ நீடு வாழி

உள்ளங்கவர் ஓவியமே, உற்சாகக் காவியமே, ஓடை நறுமலரே ஒளியுமிழ் புது நிலவே, அன்பே அழகே, அமுதே, உயிரே இன்பமே, இனிய தென்றலே, கனியே பசுந்தோகை மயிலே, பழரசச் சுவையே, மரகத மணியே, மாணிக்கச் சுடரே, மன்பதை விளக்கே என்றெல்லாம் அழைத்திடத் தோன்றுகிறது. ஆனாலும் தமிழிலே உன்னைத் தமிழே என்று அழைப்பதிலே உள்ள இன்பம் வேறு எதிலும் இல்லை. காரணம் ஏன் என்று கேட்கிறாயா? தமிழ்த்தாயே அன்னை காரணம் கேட்கையில் கூறிடாத மகன் உண்டோ கூறுகிறேன் கேள் தாயே.

ஓராயிரம் கூர் அம்புகள் உன்னை நோக்கி பறந்துவந்தாலும் அதனைக்கண்டு இமைகொட்டுவது வீரத்திற்கு இழுக்கு என்று உணர்வோடு உலவிக்கொண்டிருக்கிறாய். புயல்போல் துன்பங்கள் வந்தாலும் உன் முகத்திலே புன்னகை மாறுவதில்லை. நகை சிந்தும் உதடுகளின் மேலே அரும்பு கட்டிவரும் என்ற வியர்வையை துடைத்தெறிந்து இன்னல் புயலைப் புறங்கண்டவள் நீ என்பதற்கு எத்தனையோ வரலாற்றுச் செய்திகள் உண்டு. கல் தோன்றா மண்தோன்றா ஏன் உலகமே தோன்றமுன் தோன்றிய மூத்த தமிழே எதிர் நீச்சல் போட்டு விழுப்புண்களை ஏற்றுக் கொண்டு அடர்த மழையில் ஓயாத வாடைக் காற்றில் தமிழர் தம் இதயத்தில் அகல் விளக்கை கொழுத்திவைத்து வெற்றிகண்டவள் நீ. ஆம் பல்லாயிரம் பகைவர்கள் எதிர்ப்புகை கிளப்பியபோதும் அஞ்சி ஓடாமல் நீ ஈன்ற மக்களின் உள்ளத்தில் இடம் பிடித்த ஆற்றல் மறைச்சி நீ. தாயே வாவென்று உன் மக்கள் அழைத்த நேரமெல்லாம் துள்ளிக் குதித்து ஓடிவந்து ஆவேசத்தை அள்ளி வரும் பகையைத் தலைகுனியச் செய்தவள் நீ. அந்த துணிவு மங்கவில்லை. தூய உள்ளம் மறந்துவிடவில்லை. உறுதி அழிந்துவிடவில்லை. உழைக்கும் திறமை பட்டுப்போய் விடவில்லை என்பதை நீ பலமுறை இடையிடையே எடுத்துக் காட்டி வருகிறாய் இதற்கு சில உதாரணங்களை எடுத்துக்காட்டுகிறேன் தாயே. தமிழே உனது தமிழ்மகன் எங்கெங்கு வாழ்ந்தானோ அங்கெல்லாம் பல்லாயிரக் கணக்கான சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. சேர, சோழ பாண்டிய, பல்லவ அரசர்கள் எழுதிய சாசனங்களும் சிற்றரசர் குறுநில மன்னர் முதலானோர் எழுதிய சாசனங்களும் பல இலட்சக்கணக்கில் நமது புவியில் சிதறி ஒழிந்து கிடக்கின்றன. அந்த சாசனங்களெல்லாம் கற்களிலும் செப்புத் தகடுகளிலும்எழுதப்பட்டவை, பழங்காலக் கோவில்களின் சுவர்களிலே எழுதப்பட்ட சாசன எழுத்துக்களை அன்றும் இன்றும் தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கண்டுபிடித்து வருகின்றனர். சாசனங்களைக் கொண்டே சேர, சோழ பல்லவ பாண்டிய அரசர்களினது வரலாறுகள் எழுதப்பட்டன—எழுதப்படுகின்றன. மேலும் மக்கள் சமூக வரலாற்றையும் பழக்க வழக்க பண்பாடுகளையும் அறிவதற்கு சாசனங்கள் பேருதவியாக இருக்கின்றன. தமிழின் வளர்ச்சியை சாசனத் தமிழ்மூலம் தெரிந்து கொள்ளலாம் குறிப்பாக அக்கள்—தமக்கை அகச்சுட்டு — உட்பிரகாசம், அத்தாழம்—மாலைநேரம், ஆதிரசாலை—மகத்துவமனை, இஞ்ஞாட்டு—இந்நாட்டின், இஞ்ஞாள்—இந்தநாள். இலக்கணம் செய்து முறைகளை வகுத்த மூவேந்தர் முக்கோடி, முக்களி, மும்முரசு இப்படியாக பல ஏற்ற. குறிஞ்சி நெய்தல், பாலை, முல்லை என்று நிலப் பிரிவையே வகுத்து ஆட்சி செய்த நீர் குண்டலகேசி மணிமேகலை, தொல்காப்பிய தூய திருக்குறள், பார்புகளும் பத்துப் பாட்டு ஏற்றமிகு எட்டுத் தொகை ஆன்றோர் போற்றும் ஐம்பெரும் காப்பியங்கள் படைத்த நீர் வற்றாவரை வரவேற்று, ஒளவையை அரவணைத்து, வீரமாமுனிவரிடம் விளையாடி, கால்வெவ் பேப்புடன் கைகோத்து பாரதியின் நெஞ்சில் நர்தனமாடி, பாரதிதாசனின் இதயக் குமுறலாய் கிழம்பி அண்ணாவிடம் ஆர்ப்பணித்த தமிழ்த்தாயே நீ. அழிந்து போவதாயின் அல்லது சிதைந்து போவதாயின் நாம் அதைப் பார்த்துக் கொண்டிருக்க நாம் என்ன சோம்பேறிகளா அல்லது சோற்றால் அடித்த பிண்டங்களா சோலையிலே தென்றலிலே சொகுசு காணப் புறப்படுகிறாள் உனது மகள் தனது தலைக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்து என்று உணர்ந்தபின்தான் பின்னர் சொந்தத்தாயை காப்பாற்ற சுழற்றுகிறான் வாளை. வீரத்தின் உலைக்களமாய் வெற்றியின் நிலைக் களமாய் வாழ்ந்த என் தமிழ்த்தாயே நீ சொதாக்கள் உறைவிடமாய் சூழ்ச்சியின் மறைவிடமாய் ஆனது ஏன் கடல்கொண்ட நீ கங்கை வென்ற நீ உனது அரும் பெருமகளை உலகறியச் செய்த நீ, இமயத்திலிருந்து குமரியில் பொறித்த நீ, சொல்லை வீசினாலும், கல்லை வீசினாலும் மான்போல் குதித்து தேன் போல் விளக்கம் தரும் தாயே, வான் பெய்யா நாடு, மான்துள்ளும் காடு, தேன் பொழியும் வீடு. அதுதான் உனது கோட்டம் என்று சொன்னால் அதற்கு மிகையாக வேறெதுவும் சொல்ல முடியாது. இப்படியான சிறப்புப் படைத்த உனதருமைத் தமிழ்த் தாயே நீ காலத்தால் அழியாத சரித்திரம் கடிதமாக எழுதுகிறேன் இல்லை கதறுகிறேன் கடிதமா இல்லை கண்ணீர்த் தேக்கம், எழுத்துக்களா இது இல்லை. என் இதயத்தை பொத்துக்கொண்டு கிழம்பிய இரத்தத் துளிகள் பீறிட்டுக் கிழம்பும் என் இதயத்து இரத்தமெல்லாம் வீரிட்டதும் கண்ணியாக வெளிக் கிழம்புமாயும் உலகத்துள் மாண்போடு தூய்மையுடன் ஆயதோர் வாழ்வில் உயரும். உயிர் தமிழே, தாயே, நீ வாழி! நீடு வாழி!! நீடுழி வாழி!!!

**க. முகுந்தன்**
வகுப்பு 12

அனுபவம் ஓர் அருமையான பள்ளிக்கூடம் ஆனால் முட்டாள்கள் அதில் பயிற்சி பெறுவது அபூர்வம் ஒருவன் அரசனாக வாழலாம். ஆனால் மனிதனாகத்தான், இறக்க வேண்டும்.

எவ்வளவு நாள் வாழ்ந்தோம் என்பது அல்ல வாழ்க்கை, எப்படி வாழ்ந்தோம் என்பதுதான் உண்மை வாழ்க்கை.

அழகியமுகம் ஒருவரை வசீகரிக்கும் ஆனால் அவரின்
அன்பான பேச்சு ஒருவரை அடிமை கொள்ளும்
பேசாத வர்த்தைக்கு நீ எசமான் பேசிய வார்த்தை உனக்கெசமான்

— **ஆபிரகாம்லிங்கன்**

இரவில் பல விண்மீன்களைக் காண்கிறோம். காலையில் பகலவன் உதித்தவுடன் அவற்றை நாம் காண்பதில்லை; அதனாலே பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்கள் இல்லை என்று சொல்லிவிட முடியுமா? அவ்வாறே, நம்மில் அநேகர் அஞ்ஞான தசையில் இருக்கையில் சர்வ சக்தி வாய்ந்தஇறைவனைக் காண்பதில்லை அதன் பொருட்டு இறைவன் என்பவன் இல்லை என முடிவு செய்யலாகுமா?

— **இராமக்கிருஷ்ண பரமஹம்ஸர்**

நண்பன் ஒருவனுக்காக மடிவதென்பது பெரிய காரியம்தான். ஆனால் அதைவிடப் பெரிய காரியம், அத்தகைய சிறந்த நண்பனைத் தெரிந்தெடுப்பதேயாகும்.

— **ஹோம்**

# தலைவரின் நோக்கினிலே

எமது கல்லூரியில் முதன் முதலாக நடைபெறும் இம்முத்தமிழ் விழா, கல்லூரியின் சரித்திரத்திலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்னாள். எம்மைப் பெற்றவர்கள் இரு அன்னையர்கள். ஒன்று எம்அன்னை. மற்றவள் தமிழ் அன்னை. நம் தமிழ் அன்னைக்கு விழா எடுக்கவேண்டியது நம் தலையாய கடமையாகும். இக்கடமை இன்று பூர்த்தியடைவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். காலம் என்னும் நதியினிலே, உலகம் என்னும் மேடையிலே கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திற்கு முன்னே தோன்றி இமயத்தின் உச்சியிலே கொடிகட்டிப் பறந்தது எம் தமிழ்மொழி. பாவலராலும், நாவலராலும் புகழப்படும் முத்தமிழ் இனிமை என்னும் சொல்லுக்கே விளக்கம் தரும் அகராதி என்பதை எவரும் மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும். எனவே இவ்விழா மெருகுடன் திகழ தமிழன்னை பூரித்திட நாங்கள் அனைவரும் அவள் கண்களிலிருந்து வடியும் கண்ணீரைத்துடைப்பது எம் கடமையாகும்.

மேலும் இவ்விழாவை மிகவும்சிறப்புடன் கொண்டாடவேண்டும். தமிழன்னை மெருகுடன் திகழவேண்டுமென விருப்புக்கொண்டு எமக்கு உதவிகளும் ஒத்தாசைகளும் அழித்த அனைவருக்கும் எனது அன்புகலந்த நன்றி. இவ்விழா இவ்வாண்டுடன் மட்டுமன்றித் தொடர்ந்தும் நடைபெற எம்பின்னால் வரும் மாணவர் குழாம் அயராது உழைக்க வேண்டும் எனக் கூறுகிறேன் மீண்டும் ஒருமுறை அனைவருக்கும் எனது நன்றிகள்

எ. யோ. செபஸ்ரியன்தாசன்
தலைவர்


மோட்டார், டிராக்டர், உதிரிப்பாகங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள்

மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும்

சகாய விலையில் பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

**வித்தியா மோட்டர்ஸ்**

68, R. G. கட்டிடம்

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனிய தமிழ்

தேனினும் இனிய தமிழ்
தெவிட்டாத தெள்ளமுதம் போன்ற தமிழ்
நாவினில் தொட்டு விட்டால்
நாமதை மறக்க மாட்டோம்

அமிழ்தினும் இனிய தமிழ்
ஆதியில் தோன்றிய தென்பர்
இறைவனைக் கண்ட தமிழ்
ஈகையில் வென்ற தென்பர்
உறவினைத் தந்த தமிழ் - இதை
ஊட்டியோர் முன்னோர் என்பர்
எத்தனை மொழியிருந்தும்
ஏட்டினில் முதல் என்பர் - இதில்
ஐயம் ஏதும் இல்லை
ஒருவன் இதைச் சொல்லவில்லை
ஓதித் தெரிந்த தில்லை
ஔவையே ! சான்றிதற்கு
அஃது தமிழென அறிந்துவிடு

கே. வி. ரேய்
*பாரம் 10 B.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழாசிரியரின் கருத்தினிலே.................

தமிழிற்கு! தமிழனுக்கு விழா எடுத்தோம் அதனை சிறப்புற நடாத்தினோம் என்று கற்றோரும், மற்றோரும் கூறியபோது அவ்விழாவினை நடாத்திய, நடாத்த உதவி புரிந்தோர்க்கு ஒரு பெருமையுண்டு. அதை விட அந்த நல் நாளை நினைவுகூர்ந்து கொள்தற்கு ஒரு சிறப்புமலரை வெளியிடின் அதுவே ஒரு பெருமைக்குரிய விடயமாகின்றது. எனெனில் விலைவாசி விசம்போல ஏறிவிட்ட காலம் இது. பத்திரிகைத்தாள் தட்டுப்பாடு அத்துடன் விலை ஏற்றம், அதைவிட பத்திரிகை அச்சிடுவதற்கான செலவும் அதிகம் இக்கட்டான வேலையில் கூட சிறப்புமலர் ஒன்றினை எப்பாடுபட்டாயினும் வெளியிடவேண்டுமெனும் அவாவினால் வியாபாரத் தளங்களில் விளம்பரங்கள் சேகரித்தும், சிறுதொகை பணவுதலியையாயினும் தந்துதவிய சக மாணவர்கட்கு முதல் நன்றியை தெரிவிக்கின்றேன். முத்தமிழ் சிறப்புமலருக்கு ஆசிச் செய்தி தந்துதவிய திருநெல்வேலி பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கட்க்கும் பாடசாலை அதிபர் என்றமுறையில் ஆசிச் செய்தி தந்து உதவிய வண பிதா மதுரநாயகம் அவர்கட்கும் விழா அமைப்பாளர்கள் என்றவகையில் உதவிகள் பல நல்கிய அருட் திரு. ரி. இ. தேவராஜன், ஆசிரியர் திரு. எ. எஸ். அகஸ்ரின் அவர்கட்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அடுத்து சிறப்பு மலருக்கான கதை, கட்டுரை, கவிதைகள் தந்துதவிய மாணவர்கட்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன். அதைவிட மலர் சிறப்புடன் வெளிவர ஆக்கமும், ஊக்கமும் அளித்த ஆசிரியர்கட்க்கும் எத்தனையோ சிரமத்தின் மத்தியில் குறுகிய கால இடைவேளையில் தங்கள் சிரமத்தை எதிர்பாராது சிறப்பு மலர் சிறப்புடன் பதிப்பித்துத் தந்தமைக்காக யாழ்ப்பாணம் கூட்டுறவு அச்சகத்தினர்க்கும் நன்றியை தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். பொவாக முத்தமிழ்விழாச் சிறப்புமலர் சிறப்புடன் வெளிவர நேர்முகமாகவும், மறைமுகமாகவும் உதவிகள் புரிந்த அனைவர்க்கும் நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**எச். பேரின்பராஜா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழாவில் நிகழ இருப்பவை

மங்கள இசை

தமிழ்த்தாய் வணக்கம்

வரவேற்புரை — **தலைவர்**

அதிபரின் உரை

பிரதம விருந்தினரின் உரை — **கலாநிதி அ. சண்முகதாஸ்**

சிறப்புச் சொற்பொழிவுகள் — **வித்துவான் வேலன்**

**ஆசிரியர் க. ம. யோசவ்**
*(தமிழ்த்துறைத் தலைவர்,
புனித பத்திரிசியார் கல்லூரி)*

பரிசளிப்பு விழா

தமிழ்த்தாய் அறிமுகம்

போட்டிகளில் முதலிடம் பெற்றவை

**பேச்சு**

**சங்கீதம்**

**மெல்லிசை**

**தனிநடிப்பு**

**நாடகம்**

பட்டிமன்றம்

கவியரங்கு

நன்றியுரை. — **செயலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

FROM

# GNANAMS STUDIO

JAFFNA.

PHONE : 7067


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களாண்டில் பெண்களுக்கு

உலகின் தலைவிதி. இது உங்கள் கையில் அதாவது வருங் கால சமுதாயத்தில் நேரு, காந்திஜி, அண்ணா, பாரதி, லெனின் நெப்போலியன் இவர்களை உருவாக்கி விடுபவர்கள் நீங்கள்தான்.

தமிழ்த்தாயின் பெண்கள் தர்மத்தின் உறைவிடமாய் திகழ் கிறார்கள். இதனால் தமிழர்க்கு தரணியிலே ஓர் தனியிடமே இருக் கிறது. இன் நிலை மேலும் நிலைக்க வேண்டுமென பெண்களாண்டில் தமிழ்ப் பெண்களைக் கேட்கின்றாள் தமிழ் அன்னை. குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களிலே எவ்வகைக் குணங்கள் பதிவாகிக் கொள் கின்றனவோ அக்குணங்கள் நிரந்தரமாக கடைசிகாலம் வரை நீடிக்கின்றது. எனவே தாய்குள்ள பொறுப்பு மிகப்பெரியது. தொட் டில் பருவப்பதிவுகள், பழக்கங்கள் சீரிய ஆன்மிகப் பதிவுகளாக அமைகின்றனவா என்பது குறித்து அவள் கருத்துச் செலுத்த வேண்டும்.

தாய்மார்கள் வாழ்க்கையின் உண்மைத்தத்துவத்தை அறிந்து குழந்தைகளையும் அன்நெறிவசப்படுத்தி நாளை நம் சமுதாயத்தை நல்லபடியே உருவாக்க கணவன்மார்க்கு உதவியா இருத்தல் வேண்டும்.

இது சர்வதேச மகளிர் ஆண்டில் பெண்களுக்கானதோர் வேண்டுகோள்.

தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை
தமிழ்த் தொண்டன் பாரதிதாசன் செத்ததுண்டோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் நன்றி கூறுகிறார் . . . . . . . .

அ. க. அருள்நேசன்
விழாக்குழுச் செயலாளர்

எமது பாடசாலையில் பல்லாண்டுகளுக்குப் பிறகு சமூக சேவைக் கழகமும், கலாச்சாரக் கழகமும் ஒன்றிணைந்து அமைப்பாளர்களின் தூண்டுதலின் பிரகாரம் ஒரு ''முத்தமிழ்'' விழாவை நடாத்த ஏற்பாடுகள் செய்தோம். அநேகர் இவ்விழாவை திறம்பட நடத்த வேண்டுமென்று முன்வந்து இவ்விழாவின் போட்டிகளில் கலந்து எமக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தனர். அதைவிட நாம் இவ் விழாச் சிறப்பிதழை வெளியிட வெகு சிரமம் ஏற்பட்டது. எனினும் இச் சிரமங்கள் மத்தியிலும் ஒரு சிறந்த மலரை வெளியிட வர்த்தக ஸ்தாபனங்களிடம் உதவியை நாடினோம். பல வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளர்கள் முன்வந்து எமக்கு தம் ஸ்தாபனங்களின் விளம்பரங்களைத் தந்து உதவி செய்துள்ளனர். எனவே முதற்கண் இம்மலரை சிறப்பாக வெளியிட உதவிய வர்த்தக ஸ்தாபன உரிமையாளர் அனைவருக்கும் எமது குழு சார்பில் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றும் இவ்விழாப் போடிகளில் பங்கு பற்றிய மாணவர்களின் தராதரத்தை நிர்ணயிக்க மத்தியஸ்தர்களாகக் கடமையாற்ற முன்வந்த பாடசாலை ஆசிரியர்களுக்கும், மற்றும் இவ்விழாவின் இறுதிப் போட்டிகளில் திறம்படச் செய்தவர்களை தெரிவு செய்ய மத்தியஸ்தர்களாக கடமையாற்றிய அனைவருக்கும் இவற்றுடன் தம் கருமங்கள் யாவற்றையும் ஒத்திவைத்து விட்டு இவ்விழாவிலே பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கலாநிதி சண்முகதாஸ் (யாழ். வளாகம்) அவர்களுக்கும் நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கக் கடமைப் பட்டிருக்கின்றோம்.

இறுதியாக இவ் விழாவை நாம் பல கஷ்டங்கள் மத்தியிலும் திறம்பட நடாத்த உதவிய மாணவ தோழர்களுக்கும் இன்னும் சகல வழிகளிலும் எமக்கு உதவிய ஆசிரியர் ஜேம்ஸ் அருமைநாதன் அவர்களுக்கும் எம் குழுவின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

Space Donated
By

LONGS'
INSTITUTE

KILINOCHCHI

சிறந்த புகைப்படங்களை
நியாயமான செலவில்
பெறுவதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்

லீலா ஸ்ருடியோ

190, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHITE HOUSE

- WHITE House embalmers are Funeral Charmers
- WHITE House are Undertakers of undisputed repute
- WHITE House magic touch impart (life) to the dead
- WHITE House blend elegance with solemnity
- WHITE House of course means

WHITE HOUSE FUNERAL SERVICE, LTD.

**191, MAIN STREET, JAFFNA.**

**And everything from, Candles to Crosses, Carpet to Stands, Hearse to Coffins, Wreaths to oil lamps, obtainable at reasonable rates and prices.**

**With the Best Compliments**

From

# AUTOS LIMITED

HOSPITAL ROAD

**JAFFNA**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூது தமிழே! முத்தமிழே!
நீ சிறப்புற எம் நல்லாசிகள்!

வடமாகாணத்தில் →

* சாய்ப்புச் சாமான்கள்
* பழவகைகள்
* எண்ணெய் வகைகள்

மற்றும் சகல பொருட்களேயும்
மலிவாக எந்நேரத்திலும்
பெற்றுக்கொள்ள

"பொபி"

"பொபி"
11, பஸ் நிலேயம்,
யாழ்ப்பாணம்.

முத்தமிழ் விழா சிறப்புற
வாழ்த்துகிறோம்.

சகலவித சாய்ப்புச் சாமான்
களுக்கும் மற்றும் அலுமினேப்
பாத்திரங்களுக்கும்

சிறந்த ஸ்தாபனம்

செல்வா ஸ்ரோர்ஸ்

"செல்வா ஸ்ரோர்ஸ்"
இல. 2 A, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம்.

*With the Best*
*Compliments*
*from*

**B. J. ALOYSIUS**

GRAND BAZZAR, JAFFNA.

சிறந்த சைவ உணவு
வகைகளுக்கு இன்றே
விஜயம் செய்யுங்கள்

மலாயன் கபே

நியூஸ் ஏஜன்ட்
&
புத்தக விற்பனையாளர்கள்
36, 38, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

ஏஜன்ட்:-
ஆனந்த விகடன் & தீபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றெழுத்து......

இயற்கை அன்னை பெற்றெடுத்த இவ்வுலகில் "உயிர்" என்று மூன்றெழுத்தோடு "உடல்" என்று மூன்றெழுத்தில் உருவாகும் ஒரு குழந்தை "அப்பா" "அம்மா" என்ற மழலை பேசுவதும் மூன்றெழுத்துத்தான். ஐந்து வயதானதும் "கல்வி" என்ற மூன்றெழுத்தைக் கற்று "அறிவு" என்ற மூன்றெழுத்தில் தேர்ச்சியடைகிறான். வாலிபப் பருவம் வந்ததும் "இளமை" என்ற மூன்றெழுத்தில் தன் "திறமை" என்ற மூன்றெழுத்தைத் தேடி "பணம்" என்ற மூன்றெழுத்தை நாடி "சுகம்" என்ற மூன்றெழுத்தை அடைகிறான். காளைப் பருவம் வந்ததும் "காதல்" என்ற மூன்றெழுத்துக்கு "உயிர்" கொடுக்க "மனைவி" என்ற மூன்றெழுத்தை வாழ்க்கைத் துணையாக அடைந்து "சுகம்', என்ற மூன்றெழுத்தை அனுபவிக்கிறான். பின்னர் "பிள்ளை" என்ற மூன்றெழுத்துக்கும் "அப்பா" என்ற மூன்றெழுத்துக்கும் அதிபதியாகிறான். "காலம்" என்ற மூன்றெழுத்து "வயது" என்று மூன்றெழுத்தை அதிகரித்து, "முதுமை" என்ற மூன்றெழுத்தில் முக்தியடைந்து முடிவில் "உயிர்" என்ற மூன்றெழுத்து "உடல்" என்ற மூன்றெழுத்தைவிட்டுப் பிரிந்து "பிணம்" என்ற மூன்றெழுத்தாகிவிடுகிறது. இதனிடையே மனித உள்ளங்களில் தோன்றி மறையும் பற்பல எண்ணங்கள் அன்பு, அறம்; பண்பு, பாசம், பொறுமை, பொறாமை, வீரம், கனவு என்ற எத்தனையோ மூன்றெழுத்து எண்ணங்களைத்தான் "அறம்" "பொருள்" "காமம்" என்ற முப்பாலாகப் பிரித்து உயிருக்கே வழிகாட்டியாக இருக்கும் "தமிழ்" என்ற மூன்றெழுத்து மொழியிலே "குறள்" என்ற மூன்றெழுத்து நூலைத் தந்திருக்கிறார் திருவள்ளுவர்.

ஆதாரம் - கல்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர் வருவாரா?

ஆம்! அவர் நிச்சியமாக நாளை வருவார், வந்தேயாவார் என்று தன் மனதை திடப்படுத்தியபடி நாற்காலியில் சாய்ந்த வண்ணம் கனவுலகில் பிரவேசித்துக் கொண்டு இருந்தாள் லதா. நாளை மறு தினம் அக்கா வீட்டில் ஒரு பிறந்தநாள் கொண்டாட்டம். அக்கா மகன் சுரேஸ்சுக்கு நாளை மறுதினத்துடன் மூன்று வயது பூர்த்தியாகி நான்காவது வயது ஆரம்பமாகின்றது. நல்லவேளை நாளை வருகின்றார். நாளை மறுதினம் இருவருமாக சுரேசின் பிறந்த நாள் கொண்டாட்டத்துக்கு போகலாம் என்று எண்ணிய வண்ணம் தன் அன்றாட சமையல் வேலைகள் அனைத்தையும் வெகு சீக்கிரமாக செய்து முடித்து விட்டு அவர் வரவை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கின்றாள் லதா.

லதாவின் கனவுகள் கலைகின்றன. நேரம் ஆமை வேகத்தில் நகர்வது போல் நினைவு. அடிக்கொருதரம் தன் தலையை நிமிர்த்தி சுவர் மணிக்கூட்டைப் பார்த்த வண்ணம் வரவை எதிர் நோக்கியிருந்த அவளுக்கு ஏமாற்றம் தொடர்ந்தது. பகல் ரெயின் சில வேளை டிலேயாகியிருக்கும் என்று நினைத்தாள். ஆனால் மூன்று மணிகள் நகர்ந்து விட்டது என்ன? அப்போ இந்த ரயிலில் அவர் வரவில்லை, இரவு ரெயிலில் வருவார், நிச்சியம் வருவார் என்று பகல் சாப்பாட்டை நாலு மணிபோல் சாப்பிட்டு மாலை வேலைகளை முடித்துக் கொண்டு அவள் யோசினையுடன் நாற்காலியில் சாய்ந்தாள். நேரம் பத்து, பதினொன்று, பன்னிரண்டு ஆனது அவள் கண்களை தூக்கம் பிடித்தது. அப்படியே இருகைகளையும் மேசைமீது தலையணை போல் ஆக்கிக் கொண்டு தன்னை அறியாமல் தூங்கிவிட்டாள்.

வரவேண்டியவன் வந்தான். என்ன, லதா நித்திரை செய்துவிட்டாளா அல்லது மரணப் படுக்கையில் இருக்கின்றாளோ? லதாவின் முதுகில் மெதுவாகத்தட்டினான். லதா எனப் பலமுறை கூப்பிட்டான். கன்னத்தில் கிள்ளினான் எதற்குமே அவள் எழும்பவில்லை. பகல் வருவதாகக் கூறிய நான் வரவில்லை என்ற விசமத்தில் நித்திரை எனப் பாசாங்கு செய்கின்றாளோ என நினைத்தான். அரை மணிநேரமாக விருந்தையில் அங்கும் இங்குமாக உலாவிய படி அவளைத் தட்டுவதும், லதாவெனக் கூப்பிடுவதுமாக இருந்தான். அவனுக்கு உண்மை என்னவென்று புரியவில்லை. அவள் விசமத்தில் தான் கிடக்கிறாள் என நினைத்து தான் கொண்டு வந்த பாசல்களுடன் வீட்டை விட்டுப் புறப்பட்டான். எதற்கும் வருகிற கிழமை வருவோம் என்ற படி நேராக பஸ் தரிப்பிடம் சென்றான். விடியற்காலை முதல் பஸ் எடுத்து தான் பதவி உயர்வுடன் மாற்றலாகி வந்திருக்கும் பட்டணத்து ஆபீசை அடைந்தான். அப்போது நேரம் .. கோவில் மணி கேட்கின்றது. டாங், டாங்......... தன் மணிக்கூட்டை பார்த்துக் கொண்டான். நேரம் ஐந்தரை, பட்டணத்து ஆபீசுக்கு அவன் புதியவன் அல்ல. வேலை கிடைத்த தொடக்கத்தில் இங்கே தான் சாதாரண கிளாக்காக இருந்தவன். அதனால் அந்தச் சூழலைப் பற்றி மேலும் அறிய வேண்டி ஏதொன்றும் இருக்கவில்லை.

தனக்கென ஒதுக்கப்பட்ட அறையில் சென்று வைக்கவேண்டியவற்றை வைக்கவேண்டிய இடத்தில் வைத்துக் கொண்டு, காலைக் கடன்களை முடித்து விட்டபோது நேரம் ஏழு காட்டுகின்றது. இன்னும் ஒரு மணிநேரம் எப்படிப் போகப்போகின்றது, ஒரே போர் ஆக இருக்கப்போகிறதே என ஒரு நாற்காலியில் அமர்ந்து கொண்டார். அப்போதுதான் அவருக்கு லதாவின் ஞாபகம் வந்தது. அவருடைய மனம் அங்கலாய்த்தது. உண்மையாக லதா கடும் நித்திரையில்தான் இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்க வேண்டும். அப்படியில்லாவிட்டால் நான் வெளியேறும் போதாவது விழித்திருப்பாள். அப்படியில்லை அவள் அவ்வளவுக்கென்ன விசமக் காரியா இல்லை. இல்லவே இல்லை. அவள் நல்லவள் என் அன்புக்குப் பாத்திர மானவள் என மனத்துள் போராடிய அவன் தக்க முடிபுக்கு வந்தான். இன்று நான் லதாவிடம் சொல்லவேண்டும். அவளைத் தேற்ற வேண்டும் ஓகோ இன்று லதாவின் அக்கா மகன் சுரேசின் பிறந்தநாள் என்று கடிதம் போட்டாளே! மறந்துவிட்டேன் நிச்சயமாக இன்று வீடு செல்ல வேண்டும். லதாவைத் தேற்றவேண்டும். பிறந்த நாள் சுரேசுக்கு எதாவது அன்பளிப்புச் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் செல்லவேண்டும். ஆனால் இன்று முதல் நான் லீவு எடுத்துக்கொள்வது நல்ல தல்ல என்றாலும் எடுத்துக்கொள்வோம் என இரண்டு நாள் மெடிக்கல் லீவில் வீடு செல்லப் புறப்பட்டான். அப்போது சுரேசுக்கும் லதாவுக்கும் உடை துணி வேண்ட மறந்திடவில்லை.

வீடு செல்லும்போது நேரம் பத்தாகி விட்டது. எவருமே வீட்டில் இல்லை. ஆம் இன்று எவருமே வீட்டில் இருக்கமாட்டார்கள்தானே. சுரேஸ் வீட்டை நோக்கிச் சென்றார். அங்கு ஒரே அமளிதுமளி படலையைத் திறக்கும்போது சுரேஸ் ஓடிவந்து அப்பா வந்திட்டீங்களா எனத் தோளில் ஏறிக் கொண்டான். சித்தி... சித்தி சித்தப்பா வந்திட்டார் ஓடியாங்க என்று பெலத்த குரலிலே கத்தினன். சுரேஸ் அப்பா வந்திட்டாங்களா என சந்தோசத்துடன் அடுப்படியில் இருந்து ஓடிவந்தாள். புன்சிரிப்புடன் சுரேசின் கன்னத்தில் கிள்ளி உன் பிறந்தநாள் விழாவிற்கு அவர் வராமல் விடுவாரா என்றாள். அவர் கையில் உள்ள பாசல்களை வேண்டிவிட்டு என்னங்க நீங்க நேற்று வாறதாகக் கடிதம் போட்டுவிட்டு வர வில்லை என்ன நடந்தது? ரெயின் லேற்று? என பல கேள்விகளை சரம் போல் தொடுத்தாள். அவன் அதற்கு ஒரு புன்சிரிப்பைக் காட்டிவிட்டு லதா அது ஒரு பெரிய கதை, எனக்கு பதவி உயர்வு கிடைத்திருக்கிறது அதனால் சக ஊழியர்களுடன் சந்தோசம் கொண்டாடி வர லேற்றாயிச்சு, ஆனா நான் நேற்றே வந்திட்டேன் அதல்லாம் இரவு படுக்கையில் சொல்லுறன் இப்போ சுரேசின் பிறந்தநாளைக் கவனி என்றான். அப்போது லதாவின் தோற்றத்தை நான்தான் வர்ணிக்க வேண்டுமா?

இப்போது அவர் வருவாரா? ஆம் வந்துவிட்டார். அவர் வேறு யாருமல்ல லதாவின் கணவன் லதாவைக் கேட்கிறேன் அவர் வருவாரா ஆம். வந்து விட்டார்.

அன்ரன்ராஜ்
பாரம் 12 C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழே ஆர்த் தெழுவாய்!

கல்தோன்ற மண்தோன்ற முன்தோன்றிய மூத்த தமிழே;
எடுத்த சொல் முடிக்குமுன் அடுத்த சொல் தரும் தமிழே;
இலக்கியத்தில், இலட்சியத்தில், இயம்புகின்ற இன் தமிழே;
சொல்லினில், பேச்சினில் சென்றுலவும் செந்தமிழே;
பரவலர்க்கும், நாவலர்க்கும் பணிந்தடங்கும் பைந்தமிழே;
பரம்பரையாய் பலதிக்கும் பவனிவரும் பைந்தமிழே;
பலபுலமை பவனிவர பண்ணமைக்கும் பொன்தமிழே;
காப்பியங்கள் படைப்பதற்கு கைகொடுத்த கன்னித்தமிழே;
பகையொதுங்க பறைமுழங்கி புகழடைந்த புகழ்த்தமிழே;
மூவேந்தர், முக்கொடி, மும்முரசே, முத்தமிழே;
வலியடைத்து முறமெடுத்து புரியடித்த போர்த்தமிழே;
இமயத்தில் குமரியில் இடம்பிடித்த இன்தமிழே;
கங்கையில் கடலினில் கலந்திருக்கும் காத்தமிழே;
சாத்திரத்தை சரித்திரத்தை சான்று காட்டும் சங்கத்தமிழே;
கடல் கொண்ட தமிழே கங்கை வென்ற தமிழே;
புறத்தமிழே! மறத்தமிழே!! போர்த்தமிழே!!! ஆர்த்தெழுவாய்!

**யோ. சூ. ரைற்றஸ்**
வகுப்பு 12 (இரண்டாம் வருடம்)

"தமிழிற்கு அமுதென்று பெயர் அந்தத்—தமிழ்
எந்தன் உயிருக்கு நேர்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the best compliments from*

**SANTHI CINEMA**

**JAFFNA.**

**T'phone: 7642**

Best in Quality
Just in Price

**GALLE STORES**

*Renowned footwear*

**45, Kasturiar Road,**

**Jaffna.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்:- 585

அழகிய
பவுண் நகைகள்,
தங்கப் பவுண்
வைரங்களுக்கு

சிறந்த ஸ்தாபனம்

கே. என். எம். மீருன்சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்

*With the Best Compliments*
*from*

CEYMA SILKS INDUSTRIES
THIRUNELVELY.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முத்தமிழ் விழா" சிறப்புற

எமது நல்லாசிகள்

உங்கள் தேவைகள்
அனைத்தையும் பூர்த்தி செய்ய
**இன்றே விஜயம் செய்யுங்கள்**

★

**"சாரதா ஸ்ரோர்ஸ்"**

இல. 2, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

*Space Donated By*

★

★

**NEW VICTORS**

"முத்தமிழ்" கலாமன்றம்
வளர்ச்சியுற எமது நல்லாசிகள்

**ஓர் அன்பான வேண்டுகோள்**

"மில்க்வைற்" தயாரிப்புக்களுக்கு நீங்கள் அமோக ஆதரவு தந்தால் நாங்கள் நாட்டுக்கு நன்மை தரும் இலவச வெளியீடுகளைப் பரப்ப உதவியாக இருக்கும்.

"மில்க்வைற்" தயாரிப்புக்கள் யாவும் நீங்கள் கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதியானவை.

**மில்க்வைற்**
**சவர்க்காரத் தொழிலகம்**
**யாழ்ப்பாணம்.**

*With the Best Compliments*
*from*

★
★

**SRI**
**AMBAL**
**TRADING**
**COMPANY**

**SRI AMBAL TRADING COMPANY**

**Model Market,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசா ரேய்ஸ்

## ஸ்தாபனத்தாரின்

### மகிழ்ச்சி தரும் நற்செய்தி

பெரியோர்களே ! குழந்தைகளே !

குறைந்த விலையில் சிறந்த பொருட்கள்
திருப்திக்கேற்பத் தெரிவுசெய்ய இன்றே தொடர்புகொள்ளுங்கள்

- சிறுவர் கண்கவர் விளையாட்டுப் பொருட்கள்
- பிறந்ததினப் பரிசுகள்
- புதுமனை புகுவிழாப் பரிசுகள்
- வீட்டை அழகுபடுத்தும் அலங்கார அழகுச் சாதனங்கள்
- பாலர் பாடசாலைகளுக்கு வேண்டிய நவீன உபகரணங்கள்

காரியாலய பாவனைக்குரிய தளபாட வகைகள், சாப்பாட்டு மேசைகள் போன்றவைக்குரிய விசேட ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

---

இந்திய மர விளையாட்டுப் பொருட்களின் தரத்திற்கு இலங்கையில் மர விளையாட்டுப் பொருட்கள் செய்யும் ஒரே ஸ்தாபனம்

# திசா ரேய்ஸ்

70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PLAUS
## CREAM HOUSE
100, Five Junction,
Manipay Road, JAFFNA.

# பிளவ்ஸ்
## கிறீம் ஹவுஸ்
100, ஐந்து சந்தி,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

## ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்




**சுவைமிக்க ஐஸ்கிறீம்வகைகள்**

* ஸ்ரோபரி ஐஸ்கிறீம்
* வனிலா ஐஸ்கிறீம்
* சொக்கலேற் ஐஸ்கிறீம்
* ஜெலி ஐஸ்கிறீம்
* புருட்சலட் ஐஸ்கிறீம்


உங்கள் நிறைவே
எங்கள் நிறைவு
மற்றும்,
குளிர்பான வகைகள்,

* ஐஸ் கோப்பி
* (f)பஸன் புருட்
* கிரேப் யூஸ்
* ஒரேன்ஜ் யூஸ்

அத்துடன்
ஐஸி சொக், ஐஸ் சொக்,
ஐஸ் ஜொலி, ஐஸ் கிறீம் பார்,
ஐஸ் பழ வகைகளுக்கும்
உடனே விஜயம் செய்ய
வேண்டிய
ஒரேயொரு இடம்

## பிளவ்ஸ் கிறீர் ஹவுஸ்

பாடசாலைக் கொண்டாட்டங்
களுக்கும், பிறந்தநாள்
வைபவங்களுக்கும்,
மங்கள வைபவங்களுக்குமான
விசேட ஓடர்கள் உடனுக்குடன்
கவனிக்கப்படும்.
யாழ் மனோகரா படமாளிகையி
லிருந்து 200 யார் தூரத்தி
லமைந்துள்ளது.





கூட்டுறவு அச்சகம், 588--75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org